**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கோட்டை**

**முன்னிலை – திரு.கே.என்.குரு, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, செங்கோட்டை

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.16/2025**

**(CNR.No.TNTS11-000525-2025)**

1. கோமதியம்மாள்
2. முருகையா
3. ஆவுடைத்தங்கம்
4. ஆவுடைதங்கம்
5. மாரியம்மாள்
6. மகாராஜா
7. வசந்தகுமார்
8. மாரியப்பன் ... வாதிகள்

/ எதிர் /

1. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,
   செங்கோட்டை
2. தமிழ்நாடு அரசு அதன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
   தென்காசி.
3. தங்கவேலு

... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, இந்நீதிமன்றத்தின் முன்னர் 18.03.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.C.மகேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.ரகுமான் சாதத், அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் பிரதிவாதி தரப்பில் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரையைக் கேட்டறிந்தும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, 07.03.2012 அன்று இறந்துபோன கிருஷ்ணனின் சட்டப்பூர்வ வாரிசுகள் வாதிகளும் 3–ம் பிரதிவாதியும் தான் என விளம்புகை செய்தும்; அதன் அடிப்படையில் வாரிசுச் சான்றிதழ் வழங்கிட 1–ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்தும்; வழக்கின் செலவுத் தொகையை 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளிடமிருந்து வாதிகளுக்குப் பெற்றுத் தர வேண்டியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வழக்குரையின் சுருக்கம்** :–

வாதிகளின் தந்தையுமான காலஞ்சென்ற கிருஷ்ணன் அவர்களுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி ஆவுடைதங்கம் சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்பே காலமானார். அவரது இறப்பு முறையாகப் பதிவு செய்யப்படவில்லை. முதல் மனைவியின் வாரிசாக 3–ம் பிரதிவாதி தங்கவேலு பிறந்துள்ளார். முதல் மனைவி ஆவுடைதங்கம் காலமானதைத் தொடர்ந்து, லேட்.கிருஷ்ணன் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு கோமதியம்மாள் (1–ம் வாதி) என்பவரை இரண்டாவதாகத் திருமணம் செய்தார். இந்தத் திருமணத்தின் மூலம் வாதிகள், முருகையா, ஆவுடைத்தங்கம், ஆவுடைத்தங்கம், மாடசாமி மற்றும் மாரியப்பன் ஆகியோர் பிறந்தனர். இவர்களில் மாடசாமி 24.08.2021 அன்று காலமானார்; அவரது வாரிசுகளாக வாதிகள் 5 முதல் 7

வரையுள்ள மாரியம்மாள், மகாராஜா, வசந்தகுமார் ஆகியோர் உள்ளனர். இறந்துபோன கிருஷ்ணனின் தந்தை கருப்பன் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பும், இறந்துபோன கிருஷ்ணனின் தாயார் கருப்பாயி சுமார் 32 ஆண்டுகளுக்கு முன்பும் காலமானார்கள். கிருஷ்ணன் அவர்களின் மறைவிற்குப் பிறகு, அவரது வாரிசுகளான வாதிகளே அவரது அசையும் மற்றும் அசையா சொத்துக்களைத் தடையின்றி அனுபவித்து வருகிறார்கள். மத்திய, மாநில அரசு சலுகைகள் மற்றும் வங்கியில் உள்ள சேமிப்புத் தொகையைப் பெறுவதற்காக, வாதிகள் கடந்த 20.01.2021 அன்று 1–ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பித்தனர். ஆனால், "இரண்டு மனைவிகள்" என்ற காரணத்தைக் காட்டி 11.02.2021 அன்று 1–ம் பிரதிவாதி அந்த மனுவைத் தள்ளுபடி செய்தார். எனவே, வாதிகளே காலஞ்சென்ற கிருஷ்ணனின் சட்டப்படியான வாரிசுகள் என்பதை உறுதி செய்து விளம்புகை செய்தும், வாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க 1–ம் பிரதிவாதிக்கு உத்தரவிடக் கோரியும் இந்த வழக்கினை வாதிகள் தாக்கல் செய்துள்ளனர்.

3. <u>எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :–

வாதிகளின் வழக்கு உண்மையில்லை; அது சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இறந்துபோன லேட்.கிருஷ்ணனின் வாரிசுகள் மற்றும் அவரது பெற்றோர் இறப்பு குறித்து வாதிகள் தரப்பு கூறியுள்ள தகவல்களை அவர்களே முறையான ஆதாரங்களுடன் நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். மேலும், வாரிசுச் சான்றிதழ் கோரி உரிய SOP நடைமுறைகளைப் பின்பற்றாமல், நேரடியாக இந்த உரிமையியல் வழக்கைத் தாக்கல் செய்தது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே வாதிகளின் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும்.

**4.** இவ்வழக்கில் வாதிகளின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள பிரச்சனைகளுக்கு

தீர்முடிவினை எட்ட வழக்கு விசாரணையின் பொருட்டு கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. Whether the 1 to 8 Plaintiffs and 3rd Defendant those are legal heirs of the deceased Krishnan?

2. Whether the plaintiffs are enttield for the relief of the Declaration and Mandatory Injunction as prayed for?

3. To what other reliefs entitled to get plaintiffs?

**5.** இவ்வழக்கில், வாதிகள் தரப்பில் வழக்கை நிரூபிக்கும்பொருட்டு, வா.சா.1 விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>எழுவினா 1 முதல் 3 ற்கான தீர்வு :–</u>

i) இவ்வழக்கில், இறந்துபோன கிருஷ்ணன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 3 வது பிரதிவாதி மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என வாதிகள் கூறுவது சரிதானா? என்பது குறித்து வழக்கில் உள்ள ஆவணங்களை பரிசீலிக்கும்போது, இறந்துபோன கிருஷ்ணன் என்பவரும் அவருடைய வாரிசாகக் கூறப்படும் இவ்வழக்கு வாதிகளும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை வழக்கு ஆவணங்கள் உறுதிப்படுத்துகிறது. ஆதலால், மேற்படியார்களுக்கு இந்து வாரிசுரிமைச் சட்ட விதிமுறைகள் பொருந்தக்கூடியதாகும்.

ii) வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், காலஞ்சென்ற கிருஷ்ணன் என்பவருக்கு முதல் மனைவி ஆவுடைதங்கம் மூலம் 3–ம் பிரதிவாதி தங்கவேலு மகனாகப் பிறந்தார். முதல் மனைவி சுமார் 55

ஆண்டுகளுக்கு முன்பே காலமானதைத் தொடர்ந்து, கிருஷ்ணன் 1–ம் வாதி கோமதியம்மாளை மறுமணம் செய்தார். இத்திருமணத்தின் வாயிலாக முருகையா, ஆவுடைத்தங்கம், ஆவுடைத்தங்கம், மாடசாமி மற்றும் மாரியப்பன் ஆகியோர் வாரிசுகளாகப் பிறந்தனர். இதில் மாடசாமி 24.08.2021 அன்று காலமானார்; அவரது வாரிசுகளாக வாதிகள் 5 முதல் 7 வரையுள்ள மாரியம்மாள், மகாராஜா, வசந்தகுமார் ஆகியோர் உள்ளனர். கிருஷ்ணனின் பெற்றோர்களான கருப்பன் மற்றும் கருப்பாயி ஆகியோரும் ஏற்கனவே காலமாகிவிட்ட நிலையில், வாதிகளே அவரது சொத்துக்களைத் தடையின்றி அனுபவித்து வருகின்றனர். வாரிசுச் சான்றிதழ் கோரிய விண்ணப்பத்தை, "இரண்டு மனைவிகள்" என்ற காரணத்தைக் காட்டி 1–ம் பிரதிவாதி தள்ளுபடி செய்துள்ளார். எனவே, வாதிகள் மற்றும் 3–ம் பிரதிவாதியே கிருஷ்ணனின் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்யவும், வாரிசுச் சான்றிதழ் வழங்க 1–ம் பிரதிவாதிக்குச் செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கவும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வாதிட்டார்.

iii) 1, 2 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், வாதியின் வழக்கு உண்மையில்லை மற்றும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. கிருஷ்ணனின் முதல் மனைவி மறைவுக்குப் பிறகுதான் 1–ம் வாதியைத் திருமணம் செய்தார் என்பதையும், அதன் மூலம் மற்ற வாதிகள் பிறந்தனர் என்பதையும் வாதிகளே முறையான ஆதாரங்களுடன் நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். அதேபோல், கிருஷ்ணனின் பெற்றோர் இறப்பு குறித்த தகவல்களையும் வாதிகளே மெய்ப்பிக்க வேண்டும். வாரிசு சான்றிதழ் பெற அரசு வகுத்துள்ள உரிய SOP நடைமுறைகளைப் பின்பற்றாமல், நேரடியாக இந்த உரிமையியல் வழக்கைத் தாக்கல் செய்தது நடைமுறைக்கு மாறானது. எனவே, போதிய ஆதாரங்களும் சட்ட நடைமுறையும் இல்லாத இந்த வழக்கினைப் பிரதிவாதிகளைப் பொறுத்துத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

iv) இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 3–ம் பிரதிவாதி மட்டுமே வாரிசுகள் என கண்டுள்ள வழக்குரை சங்கதிகளை அனுசரித்து இவ்வழக்கின் 8–ம் வாதி வா.சா.1 ஆகத் தன்னுடைய முதல் விசாரணை உறுதிக்கூற்றினைத் தாக்கல் செய்துள்ளார். வா.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில், **"தனது தந்தையின் முதல் மனைவி பெயர் ஆவுடைத்தங்கம் என்றால் சரிதான் என்றும், தனது தந்தைக்கும் 1–ம் வாதிக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் தனக்குச் சரியாகத் தெரியாது ஆனால் ஆவுடைத்தங்கம் இறந்த பின்புதான் நடந்தது. அவர்களது திருமணத்தைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் வா.சா.ஆ.4 ஆவணத்தில் கோமதியம்மாளின் கணவர் பெயர் கிருஷ்ணன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தனது தந்தையின் முதல் திருமணத்தின் பலனாகப் பிறந்தவர் 3–ம் பிரதிவாதி என்றால் சரிதான், அவரும் தன் தந்தைக்கு ஒரு வாரிசு என்றால் சரிதான். தனது தாத்தா கருப்பன், பாட்டி கருப்பாயி ஆகியோர் தனது தந்தையின் வாரிசுகள் என்றால் சரிதான்; அவர்கள் தற்போது உயிருடன் இல்லை"** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

v) இருதரப்பு வாதங்களும் மற்றும் வழக்கிலுள்ள ஆவணங்களும் நன்கு பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2–ன் படி கிருஷ்ணன் மற்றும் மாடசாமி ஆகியோரின் இறப்பு சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்படுகிறது. வா.சா.1 தனது சாட்சியத்தில், கிருஷ்ணனின் முதல் மனைவி மறைவிற்குப் பின்னரே 1–ம் வாதியின் திருமணம் நடந்ததாகத் தெளிவாகக் கூறியுள்ளார். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆதார் அடையாள அட்டைகள் (வா.சா.ஆ.4 முதல் 8 வரை), அவர்கள் கிருஷ்ணனின் குடும்ப உறுப்பினர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. 3–ம் பிரதிவாதியும் கிருஷ்ணனின் வாரிசு என்பதை வாதிகளே ஒப்புக்கொண்டுள்ளனர். வாரிசுச் சான்றிதழ் வழங்க 1–ம் பிரதிவாதி மறுத்த கடிதம் (வா.சா.ஆ.3) தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வாரிசுரிமை என்பது ஒரு நபரின் சட்டப்பூர்வ

உரிமை என்பதால், அதனை விளம்புகை செய்ய உரிமையியல் நீதிமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு. வாதிகளின் வாரிசுப் பட்டியலைத் தவறு என நிரூபிக்கப் பிரதிவாதிகள் தரப்பில் எந்தவிதமான சாட்சிய சான்றாவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. எனவே, கடந்த 07.03.2012 அன்று காலமான கிருஷ்ணன் என்பவருக்கு, வாதிகள் 1 முதல் 8 மற்றும் 3–ம் பிரதிவாதி ஆகியோரே சட்டப்பூர்வமான வாரிசுகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு, கடந்த 07.03.2012–ம் தேதியன்று இறந்துபோன கிருஷ்ணன் என்பவருக்கு இவ்வழக்கு வாதிகள் மற்றும் 3–ம் பிரதிவாதி மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்தும், அவர்களுக்கு வாரிசுச் சான்றிதழ் வழங்க 1–ம் பிரதிவாதி மீது செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, **2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாளான இன்று** இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

GURU Digitally signed by GURU
Date: 2026.03.30
18:24:21 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**செங்கோட்டை**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :–**

வா.சா.1 .. திரு. மாரியப்பன் (8ம் வாதி)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

| **ஆவண எண்.** | **நாள்** | **சான்றாவணங்கள்** |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 07.03.2012 | கிருஷ்ணன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 24.08.2021 | வாதிகளின் சகோதரர் மாடசாமியின் இறப்பு சான்றிதழ் நகல். |
| வா.சா.ஆ.3 | 07.02.2024 | 1வது பிரதிவாதி வழங்கிய மேலெழுத்து கடிதத்தின் நகல். |
| வா.சா.ஆ.4 | -- | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளிப்பட நகல்) |
| வா.சா.ஆ.5 | -- | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளிப்பட நகல்) |
| வா.சா.ஆ.6 | -- | 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளிப்பட நகல்) |
| வா.சா.ஆ.7 | -- | 4ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளிப்பட நகல்) |
| வா.சா.ஆ.8 | -- | 8ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளிப்பட நகல்) |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

**- இல்லை -**

GURU

Digitally signed by GURU
Date: 2026.03.30
18:24:28 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**செங்கோட்டை**

மா.உ.நீதிமன்றம், செங்கோட்டை
அசல் வழக்கு எண்.16/2025
**தீர்ப்புரை** (Draft / Fair)
நாள் : 30.03.2026